## உஸ்பெகிஸ்தான்



# முறிந்த கித்தார் கம்பி

*"அறுந்த ஒரு கித்தார் கம்பி யின் நிமித்தம் இப்போது தேவன்மேல் நம்பிக்கையுள்ளவனாக மாறியிருக்கிறேன்"*

உஸ்பெகிஸ்தானில் 5 வயதில் ஞானஸ்நானம் பெற்றான் ஆர்டர். ஆனால் தேவனைப் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாது. தேவனைப் பற்றி அவனிடம் யாரும் எதுவும் சொன்னதில்லை; ஞானஸ்நானம் பெற்ற பிறகு அவனை யாரும் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லவும் இல்லை.

தேவனைப் பற்றி அவன் எதுவுமே யோசித்திராவிட்டாலும்கூட, 14 வது வயதில் சிலுவை வடிவ காதணியை அணிந்தான். அது அழகாக இருப்பதாக எண்ணினான்.

பிறகு, தான் கித்தார் கற்றுக்கொள்ள விரும்புவதாக தன் அம்மாவிடம் சொன்னான்.

அம்மா அவனை இசைக்கருவி கடைக்கு அழைத்துச் சென்றார். ஆர்டர் நோக்கமில்லாமல் வாழ்ந்தான். எனவே, கித்தார் கற்றுக்கொள்வது அவனுக்கு உதவுமென அம்மா நினைத்தார். பழுப்புநிற மின் கித்தார் ஒன்றை ஆர்டர் வாங்கினான்.

வீட்டில் யூட்யூபில் கித்தார் பாடங்களைக் கற்றுக்கொண்டு, வாசிக்க ஆரம்பித்தான். அது எளிதாக இருக்கவில்லை. கித்தார் கம்பிகளை அழுத்தியபோது விரல்கள் புண்ணாயின. ஆனால் ஒரு சில நாட்களுக்கு பிறகு, வலி குறைய ஆரம்பித்தது. ஆனால் யூட்யுபில் ஆசிரியர் இசைத்த இசையைப் போல தன்னுடைய இசை இல்லாததை உணர்ந்தான்.

கித்தாரை வாங்கி இரண்டு வாரங்களுக்கு ஒரு கம்பி அறுந்தது. கம்பியை மாற்றுகிற விதம் ஆர்டருக்குத் தெரியாது. எனவே, ஆன்லைனில் ஏதாவது உதவி

கிடைக்குமா என்று பார்த்தான். ஆர்ட்யோம் என்பவர் கித்தார் பாடங்கள் சொல்லிக்கொடுப்பதாக அறிந்தான்; அவரது தொலைபேசி எண் கிடைத்தது. அவரை அழைத் தான்.

“கித்தார் கம்பியை மாற்ற வேண்டும்; உதவி செய்வீர்களா?” என்று கேட்டான்.

ஆர்ட்யோன் தன் வீட்டு விலா சத்தை ஆர்டரிடம் சொன்னார்.

அது பரிச்சயமான விலாசம் போல இருந்தது. அதை எங்கு கேட் டோம் என்று ஆர்டர் யோசித்தார். ஞாபகத்திற்கு வந்தது. அந்த விலா சத்தில் இருந்த பாஸா என்பவரிடம் அவனது அம்மா வேலைசெய்திருந் தார். பிறகு பாஸா மரித்துவிட்டார்.

“நீங்கள் பாஸாவின் மகனா?” என்று ஆர்டர் கேட்டார்.

“ஆமாம், நான் அவரது மகன் தான்” என்று ஆர்ட்யோம் சொன் னார்.

மறுநாளில், ஆர்ட்யோம் அந் தக் கம்பியை மாற்றிக் கொடுத்தார். பிறகு ஆர்டரிடம் கித்தார் வாசிக்க தெரியுமா என்று கேட்டார். யூட்யு பில் தான் கற்றுக்கொண்டதை ஆர் டர் வாசித்துக் காண்பித்தான். ஆனால் வாசிப்பதை நிறுத்துமாறு ஆர்ட்யோம் சொன்னார்.

“நீங்கள் கம்பிகளை தலை மாற்றி வாசிக்கிறீர்கள்” என்று சொன் னார்.

அப்போதுதான், யூட்யூப் ஆசிரியர் வாசிப்பதுபோல் ஏன் தன் இசை இல்லை என்பது அப் போதுதான் ஆர்டருக்குப் புரிந்தது. இதுவரை தவறாக வாசித்து வந் திருக்கிறார்.

அவர் தன்னிடம் கித்தார் பாடங் களைக் கற்றுக்கொள்ளலாமென ஆர்ட்யோம் சொன்னார்.

முதல் பாடத்தில், ஆர்டர் காதில் அணிந்திருந்த சிலுவை வடிவ காதணி பற்றி ஆர்ட்யோம் கேட் டார். “நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?” என்று விசாரித்தார்.

தான் ஒரு கிறிஸ்தவரில்லை என்று ஆர்டர் சொன்னார்.

இரண்டாவது பாடத்தில், செ வந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை யில் இருந்த ஓர் அறையில் நாம் சந்திக்கலாம் என்று ஆர்ட்யோம் கூறினார். அந்தச் சபை ஆர்டரின் வீட்டின் அருகே இருந்தது; அத னால் அவர் சம்மதித்தார்.

ஆர்டர் கித்தார் இசைக்க கற் றுக்கொண்டதும், பாடங்களுக்காக அல்லாமல், பழகுவதற்காக ஆர்ட் யோமுடன் நேரம் செலவிடத் தொடங்கினார். ஆர்ட்யோம் உலக ளாவிய ஊழியராகப் பணியாற்றி, தன் கலாச்சார மக்களுக்கு சுவிசே ஷத்தைச் சொல்லுவதை அறிந்தார். அட்வென்டிஸ்டுகளோடு சேர்ந்து மலையேற்றத்திற்குச் சென்றார். அவர்கள் இளைப்பாறுவதற்காக ஓரிடத்தில் உட்கார்ந்த போது, அவர் கள் பாடின பாடல்களை ஆர்டர் மகிழ்ச்சியோடு கேட்டார். ஆர்ட் யோம் கித்தார் இசைத்துக் கொண்டே பாடல் பாடினார்.

கோடைக்காலம் வந்தபோது, வேறொரு நகரத்தில் நடந்த அட் வென்டிஸ்ட் வாலிபர் கூட்டத்தில் ஆர்டர் கலந்துகொண்டார். அந்தக் கூட்டத்தில் பேசியவர் இரண்டு

இரண்டு பேராகப் பிரிந்து, ஜெபிக்கும்படி சொன்னபோது, ஆர்டருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

“நான் ஒரு நாத்திகன்” என்று தன்னோடு சேர்ந்து ஜெபிக்க வந்தவரிடம் கூறினார்.

உடனே அந்த நபர் சென்றுவிட்டார்.

அடுத்ததாக தன்னுடன் சேர்ந்து ஜெபிக்க வந்தவரிடமும் தான் ஒரு நாத்திகன் என்று ஆர்டர் சொன்னார். மேலும், “இதற்கு முன் நான் ஜெபித்ததில்லை” என்றும் கூறினார்.

அந்த நபர் செல்லவில்லை. “பரவாயில்லை” என்று சொல்லி, ஆர்டருக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தார்.

அன்று இரவில், பகலில் நடந்த விஷயங்களை எல்லாம் ஆர்டர் எண்ணிப்பார்த்தார்.

ஓய்வுநாளில், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட வாலிபர் ஒருவர் ஞானஸ்நானம் பெற்றதைக் கண்டார்.

“நான் 5 வயதில் ஞானஸ்நானம் பெற்றேன். அட்வென்டிஸ்டுகள் ஏன் பெரியவர்களான பிறகு ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?” என்று கேட்டார்.

வேதாகம விஷயங்களைப் புரிந்துகொள்ளுமளவிற்கு பெரியவர்களாகி, தேவனுக்கு தங்களை அர்ப்பணிப்பதாக முடிவு செய்த பிறகே ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதை அறிந்துகொண்டார்.

அடுத்த ஓய்வுநாளில், தன் வீட்டிற்கு அருகிலிருந்த அட்வென்டிஸ்ட் சபைக்குச் சென்று, ஓய்வு நாள் ஆராதனையில் முதன்முதலாகக் கலந்துகொண்டார். மதிய நேரத்தில், உதவி தேவைப்பட்ட சிறுவர்களுக்கு சபையார் பொருட்களை வழங்கசென்றபோது, ஆர்டரும் அதில் கலந்துகொண்டார். அவர் இருதயத்தில் புதிதாக மகிழ்ச்சி பிறந்தது. ‘மற்றவர்களுக்கு உதவாத வாழ்க்கை என்ன வாழ்க்கை’ என்று யோசித்தார்.

அது அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக இருந்தது. அதன்பிறகு நோக்கமற்ற ஒரு வாழ்க்கையை வாழ விரும்பவில்லை. தேவனை அறியவும், மற்றவர்களுக்கு உதவி செய்யவும் தீர்மானம் செய்தார்.

ஆர்டர் வாராவாரம் ஆலயத்திற்குச் செல்ல ஆரம்பித்து, எட்டு மாதங்கள் கடந்தன. தொடர்ந்து வேதாகம விஷயங்களை ஆராய்ந்து வந்தார்; இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், ஞானஸ்நானம் பெறவும் முடிவெடுத்தார்.

தன் கித்தார் கம்பி அறுந்ததற்காக மகிழ்ச்சியடைந்தார்.

“அறுந்த ஒரு கித்தார் கம்பியின் நிமித்தம் இப்போது தேவன் மேல் நம்பிக்கையுள்ளவனாக மாறியிருக்கிறேன்” என்று கூறினார் ஆர்டர்.

உஸ்பெகிஸ்தானில் முதல் அட்வென்டிஸ்ட் ஆரம்பப் பள்ளியை ஆரம்பிப்பதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்படும்.